
Prathiyangira Trust

ப்ரத்யங்கிரா அறக்கட்டளை

# ப்ரத்யங்கிரா அறக்கட்டளை (NGO) உதயமும் யாழ்ப்பாணக் கல்லூரி 1986 (O/L) சாதாரண தர பிரிவினரும்




**ப்ரத்யங்கிரா அறக்கட்டளை**
தெல்லிப்பளை வீதி, வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ப்ரத்யங்கிரா"

## அறக்கட்டளை

Prathiyangira Trust

ப்ரத்யங்கிரா அறக்கட்டளை

தெல்லிப்பளை வீதி,
வட்டுக்கோட்டை
2023

SCAN ME

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"ப்ரத்யங்கிரா அறக்கட்டளையின் ஆரம்பகாலம் தொடக்கம், அதன் உச்ச நிலையடையும் வரையிலான சகல செயற்பாடுகளிலும் முக்கியமாகக் கருதப்படும் ஆலோசனை வழங்குதல், கடிதம் எழுதுதல், விண்ணப்பம் நிரப்புதல், அரசாங்க தொடர்புகளைப் பேணுதல், பதில் கடிதம் அனுப்புதல், அறக்கட்டளையைப் பதிவு செய்தல், கணக்கு வழக்குப் பேணுதல் போன்ற சகல ஆவண முன்னேற்றச் செயற்பாடுகளுக்கும் ஆதாரமாக இருந்து அச்சாணியாகச் செயற்பட்ட ஒரு புண்ணியவானாக, அனுபவ சீலராக,




*அமரர்,*

## சிதம்பரநாதன் சிறிகாந்தன்

*அவர்கள் மிளிர்கின்றார்.*

அவரது அளப்பரிய சேவை கருதி,

**அன்னாருக்கு இந் நூலைச் சமர்ப்பித்து,**

ஆத்ம திருப்தியடைகின்றோம்.

ஓம் சாந்தி

**ப்ரத்யங்கிரா அறக்கட்டளை**
**நிர்வாகத்தினர்**
**2023**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ப்ரத்யங்கிரா”
# அறக்கட்டளை நிர்வாகசபை


தலைவர்


உப தலைவர்


செயலாளர்


உபசெயலாளர்


பொருளாளர்

## அங்கத்தவர்கள்








## தன்னார்வத் தொண்டர்கள்



நூலாசிரியர் கே. எஸ்.சிவஞானராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. தி. உதயசூரியன் (ஜே.பி)**
போசகர்,
ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்.

## வாழ்த்துச் செய்தி

"ப்ரத்யங்கிரா அறக்கட்டளை கடந்த ....... வருடங்களாக தனது சேவையை செவ்வனே செய்து வருகின்றது. ஆரம்பத்தில் சிறிய அளவில் தொடங்கிய சேவைகள் தற்சமயம் பல்கிப் பெருகி பாரிய பரிணாம வளர்ச்சியை எட்டியுள்ளது. நான் இவர்களை உன்னிப்பாக அவதானித்து வந்துள்ளேன்.

வலிகாமம் மேற்கு பிரிவில் பல்வேறு கிராம மட்ட, பிரதேச மட்ட அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. அவற்றுள் மிகவும் தலைசிறந்த அமைப்பாக என்னால் ப்ரத்யங்கிரா அமைப்பைக் குறிப்பிட முடியும். இவ்வமைப்பு தற்சமயம் தனது சேவைகளை விஸ்தரித்து இப்பிரி விற்குள் மட்டுமல்லாது வடமாகாணம் முழுவதும் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றது.

சிறார்களுக்கான சத்துமா, உலர் உணவுப் பொதி விநியோகம், பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்கான கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்களை வழங்கல், வறிய மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டிற்கான ஆதரவு வழங்கல், வறிய மக்களை இனம்கண்டு வாழ்வாதார உதவிகள் வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல் என்பவற்றோடு வீடுகள் திருத்தி கொடுப்பதுடன், வீடற்ற பல குடும்பங்களுக்கு வீடுகள் கட்டி வழங்கி வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அமைப்பு ரீதியாக நல்ல ஒரு நிலைக்கு முன்னேறுவதை அவதானிக்க முடிகிறது. அத்துடன், தற்சமயம் ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகவும் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஓர் அயராத முயற்சியாகும்.

இவ் அமைப்பின் தலைவராக இயங்கிக் கொண்டிருக்கும் திரு. சந்திரபால் அவர்களுக்கும், அவருடன் சேர்ந்து இயங்கும் அனைத்து நிர்வாகக் குழுவினருக்கும் மற்றும் தொண்டர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

நிதியை உரிய முறையில் சிறப்பாகப் பயன்படுத்தி கணக்கீட்டு முறையில் அவற்றைப் பகிரங்கப்படுத்தி வருவதனால் உலகளாவிய ரீதியில் பலர் நிதியுதவி வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

தற்போதைய காலகட்டத்தில் கௌரவ சேவை செய்வதற்கு எவரும் முன்வருவதில்லை. அவ்வாறான கால கட்டத்தில் இப்பெரும் கைங்கரியத்தைச் சிறப்பாக செய்து வரும் ப்ரத்யங்கிரா அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களும், நன்றிகளும் உரித்தாகுக.

நாம் மக்களுக்கு சேவை செய்யக் கொடுத்து வைத்ததும் இறைவனால் எமக்களிக்கப் பட்ட வரமே என்பதை நாம் மனதிலிருத்தி ஆதரவையும் வழங்குவோமாக.

**"வாழ்க ப்ரத்யங்கிரா அறக்கட்டளை"**

**"தொடர்க தங்கள் சமூகப்பணி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி**
**1986 O/L பிரிவு மாணவர்கள் சார்பாக....**

மேற்படி பாடசாலையில் நாம் பயின்ற **1986 - O/L** பிரிவு - விளங்கிய காலம் மிகவும் உன்னதமான பொற்காலமாகும். இற்றைக்கு முப்பத்தேழு வருடங்களுக்கு முன்னர், நாம் ஒவ்வொருவரும் மிகுந்த பய பக்தியுடனும், சகோதர வாஞ்சையுடனும், மாதா, பிதா, குரு பக்தியுடனும் கற்றதன் பேறாக இன்று அனைவருமே புலம்பெயர் நாடுகளிலும் இங்கும் நிறைந்த வளமுடனும் சிறந்த வாழ்வுடனும் வாழ்ந்து, ஊருக்கும், கல்லூரிக்கும் பெருமை சேர்த்து வருகின்றோம்.

அந்த வகையில், போருக்குப் பின்னதாக, வடபுலம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி, உடுக்க மாற்று உடையின்றி, படிக்கப் பணமின்றி பொருளாதார நெருக்கடிகளினால் மிகவும் நொந்து நலிவடைந்த நிலையில், நண்பர் சந்திரபால், அவர்களோடு இணைந்து யார் யாருக்கு என்ன என்ன உதவிகள் தேவை என்பதை அவர் மூலம் அறிந்து, அவரால் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனமான "ப்ரத்தியங்கிரா" அறக்கட்டளை மூலம் படிப்படியாக நிறைவேற்றி வருகின்றோம். முன்பள்ளி தொடக்கம் உயர்கல்வி வரையிலான மாணவர்களுக்கும் மற்றும் உலர்உணவு, சத்துமா, வாழ்வாதார மற்றும் விவசாய, மரக்கன்று, பசுமாடு, கற்றல் உபகரணம், சமைத்த உணவு, நிரந்தர வீடுகள் வரை அதி உச்ச உதவிகளை யாம் குறைவின்றி நிறைவாக வழங்கி ஆற்றி வருகின்றோம். எமது உதவி வடபுலம் சார்ந்ததாக மட்டுமன்றி அதற்கப்பாலும் எமது இதயம் நெகிழவும், உதவவும் காத்திருக்கின்றது.

இந் நிலையில், "ப்ரத்தியங்கிரா" அறக்கட்டளை ஊடாக நொந்து நலிவடைந்த குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய, உதவிகளைப் படிப்படியாக வழங்கி அவர்களும் இந்த மண்ணில் நிமிர்ந்து வாழ ஆவலுறுகின்றோம்.

நிறைவாக, 86, O/L பிரிவு மாணவர்கள் சார்பாக, புலம்பெயர் நாடுகளில் வாழும் நாமனைவரும் நிறைவோடு வாழ்த்தி, வரமோடு நீவிர் மென்மேலும் உதவும் கரங்களாக இப் புவியில் மிளிர, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வெல்க தம்பணி,**
**வளர்க எம் அணி**
**வாழ்க பெரும் பணி**

1986 O/L பிரிவு
**புலம்பெயர் மாணவர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



DR. REV. FR. NADARAJAH SUBAS,
S.V.N. JOHN PAUL.L.C.C.F,
C.Th, I.S.M, USA, B.A, B.Th,
PH.D/USA
(BISHOP ARTHER STUDIES)
INTERNATIONAL BRIDES JUSTICE LANKA)

அன்பு, கருணை, இரக்கம், ஈகை ஆகிய சிறந்த பண்புகளை முதலாக்கி, மானிட சமூகத்தை நேசிக்க வைத்த ஒரு பெரிய நிறுவனமாக, ப்ரத்யங்கிரா அறக்கட்டளையானது, மாதவ அறச்சாலையாக இன்று மிளிர்கிறது.

எமது பிராந்தியமானது அசாதாரண சூழ்நிலையால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நிலை இன்றுவரை தொடர்கிறது. இந்நிலையில் பஞ்சம், பசி, பட்டினியோடு, பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்கள் வறுமையால் வாடி வதங்கி நிற்கின்ற பரிதாப நிலை கண்டு, ப்ரத்யங்கிரா அறக்கட்டளையானது அவர்களது இல்லம் தோறும் சென்று தீர ஆராய்ந்துணர்ந்து, அவர்களுக்கு என்னென்ன உதவிகள் தேவையோ, அவற்றை திருப்திகரமாக நிறைவேற்றி வைப்பதில் வெற்றி கண்டு வருகிறது.

இந் நிலை மென்மேலும் தொடரவும், பயனாளிகள் வரம் பெறவும், ப்ரத்யங்கிரா அறக்கட்டளை வானுயர நின்று பேருதவி புரிய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைத் தோத்தரித்து, ஆசி வழங்குகின்றேன்.

**வாழ்க அறக்கட்டளை.**
**வெல்க அவர் தம் பணி**
**வேண்டும் அவர் தம் வரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**கலாபூஷணம் கே.எஸ். சிவஞானராஜா,**
17, ஆடியபாதம், வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

எமது மக்கள் படும் துன்ப, துயரங்களைக் காணுற்றபோது, பொருளாதாரத்தால் நலிவடைந்த நிலையில் பஞ்சம், பசி பட்டினியோடு வீடு வாசல்களை இழந்த நிலையில் வாடிய நிலை கண்டும், ஓலைக்குடிசையில் ஒழுக்கோடு வாழ்நாளைக் கழிக்கும் பரிதாபநிலை கண்டும் மனம் இரங்கி, தலைவணங்கி சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவிகளை மனமுவந்து ஆற்றும் ஒரு பெரிய தர்மசாலையாக "ப்ரத்யங்கிரா" அறக்கட்டளை இயங்கி வருகிறது.

கண்ணீர் சிந்தும் குடும்பங்களை இனங்கண்டு கருணையோடு அணுகி பேருதவி புரிகின்ற ஒரு அறச்சாலையாக மிளிரும் இந்த அறக்கட்டளை, மேலும் தழைத்து மென்மேலும் வளர, பேருபகாரிகள் தொடர்ந்தும் உதவிபுரிய வேண்டுமென வாழ்த்தி, வணங்கி ஆசி வழங்கி அமைகின்றேன்.

**"வெல்க தம் பணி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திரு. நடராசா சிவரூபன்**
கிராம அலுவலர்.

போரின் நிமித்தமாகவும், கொரோனாவின் தாக்கத்தினாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் எமது மக்களில் பெரும்பாலான குடும்பங்கள் வீடிழந்து, உயிரிழந்து, பொருளிழந்து, பொருளாதாரம் நலிவுற்று வறுமையின் உச்சத்தினை அடைந்து வானம் பார்த்து ஏங்கிய நிலையில் , ப்ரத்யங்கிரா அறக்கட்டளையினரின் கடைக்கண் கருணை பாலித்தன. நொந்தவர்களை அரவணைத்து ஆறுதலளித்து, அவசியம் எது தேவையோ அவற்றினை ஆராய்ந்து, தாமதியாது வழங்கி நிறைவேற்றி வருகிறது. ஓலைக் குடிசையில், ஒழுக்கோடு வாழ்பவர்க்கு வீடு, பசியோடு வாடுபவர்க்கு உலர் உணவுப் பொதிகளும், வசதியற்ற மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகளும், வாழ்வாதார மேம்பாட்டிற்காக தையல் இயந்திரங்கள், பசுமாடு வழங்குதல், ஞாயிறு தோறும் அன்னதானம் வழங்குதல் போன்ற இன்னோரன்ன சேவைகளை ப்ரத்யங்கிரா அறக்கட்டளை பேறாக்கி வருகிறது. இச் சேவை நீள நினைந்து நீடித்து வெற்றிபெற எனது வாழ்த்துக்கள் நிறைவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prathiyangira Trust

ப்ரத்யங்கிரா அறக்கட்டளை

## நலிவுற்றோர் வாழ்வில்
## ஒளியேற்றுவோம்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்ரத்யங்கிரா அறக்கட்டளை ஆரம்பமும் வளர்ச்சியும் பங்களிப்பும்

**யாழ்ப்பாணக் கல்லூரி**
**1986 O/L சாதாரண தர பிரிவினரும்**



யாழ்ப்பாணக் கல்லூரியின் முதலாம் வகுப்பின் ஆரம்பத் தோற்றம்.
ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான ஓலைக் கொட்டிலின் மாதிரித் தோற்றம் (1976)

ஒவ்வொரு மனிதனின் அகக் கண்களைத் திறக்கும் ஆலயமே பாடசாலை களாகும். ஆரம்பம் முதல் விடை பெறும் நாள் வரையுமுள்ள காலப்பகுதியில் கற்பித்த ஆசான்களைப் பின்பற்றியே மாணவர்கள் பேறாக்கப்படுகிறார்கள். அதிலும் குறிப் பாக மனிதநேயமுள்ள கல்வி, மாணவர்களுக்கு வரமாகும்போது அவர்களால் உலகம் ஆரோக்கியமான வாழ்வு பெறும் என்பது வரலாற்று உண்மையாகும்.

இந்நிலையில், யாழ்ப்பாணக் கல்லூரியில் 1986 (O/L) சாதாரண தர பிரிவினரின் காலம் பொற்காலமாக மிளிர்கிறது. அதிபர் திரு. A. கதிர்காமர் (B.SC, M.A) அவர்கள் கல்லூரியை மேம்படுத்திய காலமது. அற்புதமான பேறுகள் விளைந்த காலமது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986 O/L தர மாணவர்கள் ஒவ்வொருவரும் கல்விப் பேறுகளுடன், மனிதநேயம் கொண்டவர்களாக வெளியேறினார்கள். நேர காலம் அவர்களுக்கு வெளிநாடுகளில் சென்று வாழக்கூடிய வாய்ப்பும் வசதியும் கிடைத்தது. எல்லோருமே தாம் கற்ற கல்லூரியின் தாற்பரியத்தோடு வாழ்வதற்கு ஆரம்பப் பிரிவுக்குப் பொறுப்பான அதிபராம் செல்வி. எலியாஸ் அவர்களது வழிகாட்டல் பெரிதும் உதவிற்று. யாவரும் உன்னத நிலையில் பேறுகொண்டபோது, உலகையே அச்சுறுத்தும்படியாக கொரோனா என்ற கொடிய நோய் உலகெங்கும் பரவி மக்களை மரணப் பிடிக்குள் தள்ளியது. மூன்றாந்தரப்பு நாடுகள் செய்வதறியாது தத்தளித்தன. மக்கள் வீட்டைவிட்டு வெளியேறாதவாறு முடங்கினர். முடக்கப்பட்டனர். பஞ்சம், பசி, பட்டினி பாகுபாடின்றி மக்களை வாட்டி வதைத்தது.

இந் நிலையில், 1986 (O/L) சாதாரண தரத்தில் கல்வி கற்ற மாணவர்களில் சந்திரபால் என்பவரின் வேண்டுகோளுக்கு அமைவாக, அன்று கல்வி கற்ற மாணவர் கள் மனிதநேயம் கொண்டு உதவி செய்ய விருப்பம் கொண்டார்கள். வட புலத்தில் வாழும் மக்களின் துன்ப, துயரங்களைப் புரிந்து கொண்டவர்களாக, அவசர அவசிய உதவிகளைச் செய்வதற்கு மனிதநேயம் கொண்டார்கள். அதன் விளைவாக மக்களுக்கு முதற்கட்டமாக உலர் உணவுப் பொதிகள் நலிவடைந்த குடும்ப ரீதியில் வழங் கப்பட்டன. அதேவேளை உதவிகள் தேவைப்படும் மாணவமணிகளுக்குச் சத்துமா பொதி செய்யப்பட்டு ஆரம்பகட்டமாக முன்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வந்தன. இப்பொழுதும் இவையெல்லாம் முன்னெடுக்கப்பட்டு தொடர்ந்து வழங்குவதற்கும் 1986 (O/L) சாதாரணதர பிரிவு மாணவர்கள் ஆர்வம் கொண்டவர்களாகக் காத்திருக்கின்றார்கள்.

அன்று ஆரம்ப பிரிவிலே ஓலைக்கொட்டிலில் கல்வி கற்ற காலம் தந்த பரிசாகத் தாம் தாம் பெற்ற உயர்ந்த வாழ்வு அமைந் ததை எண்ணிய மாணவர்கள் இன்னும் பல மனித நேயச் செயற் பாடுகளை வெல்லுமாறு ஆற்றி வருவது இங்கு பதிவிடப்படுகிறது. இதற்குப் பெறுமதி சேர்க்கும் முகமாக ப்ரத்யங்கிரா அறக்கட் டளையானது அங்கீகாரம் பெற்றது. அதன் அயராது முயற்சியின் பலனாக முதலாம் கட்ட, இரண்டாம் கட்ட ஏற்பாடுகளின்படி, வகுப்பறை நண்பர்களின் அன்பளிப்புக்கள் நீண்டுகொண்டு போகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந் நிலையில் எம்மை விட்டுப்பிரிந்த J/C 1986 O/L Batch வகுப்பறை நண்பர்கள் நினைவாக, மனோ பசுமைத்திட்டம் பாமதி பாடசாலை சீருடை வழங்கும் திட்டம் உமாசங்கர் கால்நடைகள் வளர்ப்புத் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப் பட்டு வருகிறது. மேலும் எம்மை விட்டுப்பிரிந்த நண்பர்கள் நினைவாக பற்பல செயற்றிட்டங்கள் நலிவடைந்த மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆம்! இதன் பெறுபேறாகத் தோற்றம் பெற்றதே ப்ரத்யங்கிரா அறக்கட்டளையாகும். இஃது ஒரு




மனிதாபிமான செயற்றிட்டங்களை முன்மொழிந்து திறம்பட தூயகரங்களோடு ஆற்றிவருவதனால் அரச சார்பற்ற ஒரு நிறுவனமாக அரசினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு அங்கீகாரம் பெறுவதற்குரிய அறிக்கைகள் அறக்கட்டளைக்கு வலுச் சேர்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை உரியவாறு வழிநடத்தி வழிகாட்டி கல்வியில் பேறடைய வைத்த மதிப்பார்ந்த அதிபர்களை சிரந்தாழ்த்தி வணங்குகின்றோம்.



திரு. ராஜன் கதிர்காமர்



செல்வி. எலியாஸ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாம் கற்ற வகுப்பறைகளில் ஒன்றும் அதற்குச் செல்லும் மண்டப நுழைவாயிலிலும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றைய பசுமை நிறைந்த நினைவுகளோடு நாம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய எமது மனிதநேய செயற்பாடுகளின் ஆரம்பம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுவர்களுக்கான சத்துமாத் திட்டம் தொடர்பானது









யாழ்ப்பாண இந்துக்கல்லூரி பழைய மாணவர்களால் ப்ரத்யங்கிரா அறக்கட்டளை ஊடாக பரிபூரணி சத்துமா திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்ரத்யங்கிரா அறக்கட்டளை





ப்ரத்யங்கிரா சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன், தர்ம காரியங்களை ஆற்றுவதற்காக மேற்படி அறக்கட்டளை 2010 இல் ஆரம்பிக்கப்பெற்றது. இன, மத, மொழி, குல பேதமற்ற ஒரு தொண்டு நிறுவனமாக மக்களுக்கு வரமாகியுள்ளது.

குறிப்பாக, வறுமைக்கோட்டில் வாடுகின்ற நலிவுற்ற குடும்பங்களை - அடிப்படையாகக் கொண்டு, வேண்டிய தேவைகளை இனங்கண்டு உரியவர்களால் உறுதிப்படுத்திய பின்னர், சம்பந்தப்பட்டவர்களின் முதன்மையான தேவைகளை நிறைவேற்றி வைக்கின்ற ஒரு புனிதமான நிறுவனமாக இயங்கி வருகிறது. ஆரம்பத்தில் எமது அறக்கட்டளையினர் வீடு வீடாய்ச் சென்றும், கிராமங்கள் ரீதியாகச் சென்றும், அவரவர் நிலைமைகளை நன்கு ஆராய்ந்த பின்பு சிறுவர்களை மையமாக முன்னிலைப்படுத்தி, அவர்களின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யும்படியாக, கற்றல் உபகரணங்கள், சீருடைகள், சப்பாத்துக்கள், ஆதார, ஆகார உலர் உணவுகள் மற்றும் அவர்களால் வேண்டப்படுபவையும் வழங்கப்பட்டு கற்றலுக்கான ஊக்குவிப்புக்கள் பல மாணவர்களுக்காய் முன்னெடுக்கப்பட்டன. மக்களது வாழ்க்கைப்பேறுகளில் கல்வியே பெருஞ் செல்வப்பேறாகும். இதைச் செவ்வன வேயுணர்ந்த அறக்கட்டளையினர் யாழ், வன்னி, மன்னார் எனத் தமது சேவையினை விஸ்தரித்து அவர்களுக்காய் அர்ப்பணிக்கவும் ஆவல் கொண்டு, அறக்கட்டளையை நோக்கி வருகின்றனர் இப்போதும் கூட.

2019 இல் கொவிட் தொற்று நாடெங் கும் பரவி மக்கள் வீட்டுக்குள் முடங்கி அவதி யுற்றபோது கருணை உள்ளம் கொண்ட உள் ளூர், வெளியூர் வாசிகள் துயர் கொண்ட மக்க ளுக்காய் இரங்கி, உதவிகளை மேற்கொள்ள ஆவல்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இதன் பிரகாரம் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையின் தர்மகாரிய பணிகளை உள்வாங்கிய வட்டு - யாழ்ப்பாணக் கல்லூரியின் 1986 (O/L) சாதாரணதர பிரிவு மாணவர்கள் பெரிய அளவில் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு தத்தமது மனப்பாங்கை வெளிப்படுத்தியதன் விளைவாக, மேற்படி அறக்கட்டளையானது புத்துணர்ச்சி பெற்றது. புலம்பெயர் நாடுகளில் வாழும் மேற்படி கல்லூரி மாணவர்கள் எம்மை எண்ணி இரங்கி உதவி செய்யத் துடிக்கும் போது நாமும் அவற்றைத் தவமாக எண்ணி வரவேற்று ஆவன புரிகின்றோம்.





உண்மையிலே தொழிலற்று இடருற்று வாழ வழியின்றித் தவித்த பல குடும்பங்களை இனங்கண்டு அவசர உதவியாக, உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்டும் வருகின்றன.

இந்த அறக்கட்டளையின் செயற்பாடுகளை அவதானித்த சங்கானை பிரதேச செயலக அதிகாரிகள் மென்மேலும் இந்த அறக்கட்டளையின் பணிகள் தொடர வேண்டும் என்ற தோரணையில் 2020 ஆனி மாதம் 16 ஆம் திகதியன்று ஒரு சமூக சேவை நிறுவனமாகப் பதிவு செய்துள்ளமை அறக்கட்டளைக்கு மேலும் வலுச் சேர்த்தது எனலாம். பிரதேச செயலகத்தின் கோட்பாடுகளுக்குப் பாதகமில்லாதவாறு தலை நிமிர்ந்து மக்கள் சேவையே மகேசன் சேவை என்றவாறு சேவையில் மனங்கொண்டு பூரித்து நிற்கிறது. இஃது ஒரு முதலாவது அங்கீகாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மேலும் வறுமைக்கோட்டையும் தாண்டிய நலிவுற்றவர்களின் வாழ்வாதார தேவைகளைப் பூர்த்தி செய்யும்படியாக நிரந்தர கோழி வளர்ப்பு, கோழிக் கூட்டுத் திட்டம், ஆடு, மாடு வளர்ப்புத் திட்டம், தையல் இயந்திரம் வழங்கல் போன்றவை சம்பந்தப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தைப் பேணவும் வருமானமீட்டவும் முடிந்தது. அவ்வுதவிகள் இப்பொழுதும் தொடர்கிறது.





**உண்டி<br>கொடுத்தோர்<br>உயிர் கொடுத்தோராவர்<br>அதைக் -<br>கண்டு கொண்டவர்கள்<br>கை கொடுத்த<br>தெய்வங்களாவர்**

இவற்றைவிட முன்பள்ளி மாணவர்களுக்கான அதி முக்கிய செயற்றிட்டமாக பரிபூரணி சத்துமாத்திட்டம் நல்ல வரவேற்பினைப் பொறுப்பாக்கிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! சுமார் 45 முன்பள்ளிகளைச் சேர்ந்த 1000 மாணவர்களுக்குச் சுழற்சிமுறையில் "பரிபூரணி சத்துமா" உரியவாறு திருப்திகரமாக வழங்கப்படுகிறது. இதன்மூலம் எதிர்கால சந்ததிக்கு வரமான சிறார்கள் நல்ல ஆரோக்கியத்துடன், நோய்நொடியின்றி வாழ வழி சமைக்கப்படுகிறது. கல்வியும் மேம்படுகிறது.




இத்திட்டத்தில் தயாரிக்கப்படும் "சத்துமா" திட்டமானது மிகவும் தரமான தானியங்களால், சுத்தமாகத் தயாரிக்கப்படுகிறது. புரதச் சத்துக்கள் நிறைந்தவை. பயறு, உளுந்து, எள்ளு, சோளம், பட்டாணிக் கடலை, குத்தரிசி ஆகிய சப்ததானியங்களால் இதம் பதம் செய்யப்பட்டு இயந்திரங்கள் மூலம் மாவாக்கப்பட்டு, பின்னர் பொதி செய்யப்பட்டு முன்பள்ளிகளுக்குச் சென்று எமது குழுவினரால் மாணவர்களுக்கு நேரடியாகவே வழங்கப்படுகிறது.





கலைமகள் ஐயனார் கோவிலடி
முன்பள்ளிகள்
வாலை அம்மன் கோவிலடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திட்டமானது, மிகவும் பயனுள்ள, பரோபகாரமான கைங்கரியமாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக தாய், தந்தையரை இழந்த 23 மாணவர்களுக்கு அவர்களது கற்றல் மற்றும் வாழ்வாதார தேவையினை மையமாகக் கொண்டு, மாதாந்தம் 5000/= ரூபாய் வழங்கப்படுகிறது.





இப் பணியால் நலிவுற்ற மாணவர்கள் தத்தம் பொறுப்பையுணர்ந்து கல்வியில் உச்ச பெறுபேற்றையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் வாழ்வாதார நெருக்கடிகளுக்கு உள்ளான குடும்பங்களுக்கு சுழற்சி முறையில் அரிசிப் பொதி, அரிசிமா பொதி திருப்திகரமாக வழங்கப்படுகிறது. இந்த உபகார உதவிகள் யாழ்ப்பாணம், வன்னி, மன்னார் மாவட்டங்கள் வரை பயனளித்துள்ளது.







அதேவேளை, ஆதரவற்ற முதியோர்களையும் கவனத்திற் கொண்டு அவர்களையும் கைவிடாது, அவர்களுக்கும் வேண்டிய உலர் உணவுப் பொதிகளையும் அளித்து வருவதில் ப்ரத்யங்கிரா அறக்கட்டளை தயங்காது முன்னிற்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, முக்கிய இடம் வகிக்கும் பிரதான செயற்றிட்டமாக வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இப்படியும் ஒரு வாழ்வா என்று ஓலைக் குடிசையில் ஒழுக்கோடு நித்திரையின்றி நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் பரிதாப நிலையில் வாழும் குடும்பங்களுக்கு சுமார் 46 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இக்கைங்கரியம் முன்னெடுக்கப் பட்டு வருகிறது.

உண்ண உணவு, உடுக்க உடை, உறங்க உறையுள் ஆகிய மூன்றும் ஒரு மனித னுடைய அடிப்படைத் தேவைகளாகும். இதனை ப்ரத்யங்கிரா அறக்கட்டளையினர் அக்கறையோடு அணுகி கருணை கொள்வதற்குப் பெரு விருப்பம் கொண்டுள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மேலும், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அனுபவிக்கும் துன்ப துயர வேதனைகளைக் கருத்தில் கொண்டு, சுயதொழில் வாயிலாக தத்தம் வாழ்வாதார மேம்பாட்டுக்காக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



மற்றும் அசாதாரண சூழ்நிலையால் ஏற்பட்ட வடுக்களாக இன்றும் ஊனமுற்றவர்கள் நாட்டிலே சிறந்த பிரஜைகளாகத் திகழ்கிறார்கள். அவர்களுக்கான அவசிய தேவையாக சக்கர நாற்காலிகள் வேண்டப்பட்டதன் பொருட்டு, சுமார் 50 சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டு, ஏனைய தேவையாக ஊன்று கோல்களும் வழங்கப்பட்டன. வன்னி யாழ்ப்பாண மக்களுக்கு இது வாய்ப்பாக அமைந்தன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மேலும் உபகாரிகளின் அனுசரணைக்கமைவானதும், சுயதொழில் ஊக்குவிப்புக்கு அமைவானதுமான நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைகளைச் சமாளிக்கும் விதத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் அறக்கட்டளை ஒற்றைத் தட்டு கோழிக் கூடு வழங்குதல், இரட்டைத் தட்டு கோழிக்கூடு வழங்குதல், கோழிகள் வழங்குதல், கோழித் தீவனம் வழங்குதல், பாத்திரங்கள், உபகரணங்கள் வழங்குதல் ஆதியாம் சேவைகளை நிறைவாக நடைமுறைப்படுத்துகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக வறுமைக்கோட்டில் துவள்கின்ற மிகவும் நலிவுற்ற குடும்பச் சூழ்நிலையிலே படிக்கவல்ல மாணவ மணிகளுக்கு 140 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இஃது ஒரு பாரிய செயற்றிட்ட ஊக்குவிப்பை அளித்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் சில செயற்றிட்டங்களாக,



## அமரர் பிரதீபன் சக்கரநாற்காலி வழங்கல் திட்டம்



இத்திட்டம் தற்போது நடைமுறையிலுள்ள ஒரு புண்ணியமான செயற்பாடாகும். இற்றைவரை கூடுதலான பயனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். நடமாட இயலாத அதேவேளை நகர முடியாதவர்களின் தரவுகளினது அடிப்படையில் மேற்படி திட்டம் நன்றியோடு அனுகூலமாகிறது. குறிப்பாக வன்னி பெரு நிலப் பரப்பில் இஃது அவசியமாக வேண்டப்படுகிறது. யாழ் மாவட்டத்திலும் பயனாளிகள் பேறடைந்துள்ளனர்.

## அமரர் தணிகேசன் தையல் இயந்திரம் வழங்கல் திட்டம்





இத்திட்டமானது,பெண் தலைமைத்துவக் குடும்பங்களையும், பொருளாதார ரீதியாக நலிவடைந்த வருமானமேதுமற்ற குடும்பங்களையும் மையமாகக் கொண்டு செயற்படுத்தப் பட்டு வருகின்றது. இக்கைங்கரியமானது பலருக்கு வாழ்வளித்துள்ளது. விண்ணப்பங்கள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன. ஆவன புரிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2021இல், 1986 O/L சாதாரண பிரிவு மாணவர்களின் அனுசரணையில் யாழ்ப் பாணக் கல்லூரி மைதான வளாகத்தில் வைத்து நலிவுற்ற மாணவர்கள் 104 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டமை ஒரு வரலாற்றுப் பேறாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








ஒரு காலத்தில் கால்நடைகளே குடும்பங்களை வல்லமை பெறச் செய்ததென்பது அனுபவ ரீதியாக யாம் கண்ட உண்மையாகும். இதன் பிரகாரம் பொருத்த மான பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்குக் கால்நடைகள் வழங்கப் படுகின்றன.

அவரவர்களின் தேவைகளுக்கேற்ப ஆடுகளும் மாடுகளும் வழங்கப்படுகின்றன. இவைகளை விருத்தி செய்வதன் மூலம் பூரண உணவாகப் பாலும், தோட்டம் செய்வதற்கான எருவும், இல்லச் செழிப்பும் வாய்க்கப் பெறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருத்துவத் தேவைகளுக்காக ஏங்கும் பயனாளிகளுக்கு மருத்துவ உதவிகளும், அவற்றின் அவசியம் கருதி பொருளாதார வசதிகளும் செய்து கொடுக்கப் படுகிறது. முக்கியமாக கண் பார்வைக் குறைபாடுடைய நலிவுற்றவர்களுக்கு, இலவச மாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது.





இன்னுமொரு சிறப்பம்சம் யாதெனில், வீட்டுக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்க வல்லதும், சுயதேவையைப் பூர்த்தி செய்ய வல்லதுமான **மனோ பசுமைத் திட்டம்** வெற்றியீட்டும் படியாக வல்லதொரு பயனாளிகள் சமூ கத்தை உருவாக்கியுள்ளது. இருக்கின்ற அற்ப சொற்ப நிலத்தை முதலாக வைத்து பேறாக்குகின்ற நலிவுற்ற குடும்பங்களுக்கு பயனுள்ள விதைகள், மரக்கறிக் கன்று கள், இயற்கை உரப்பசளைகள், போதுமான ஆலோ சனைகள் வழங்கப்பட்டது மாத்திரமின்றி, தேவையான விடத்து, நீரிறைக்கும் இயந்திரங்களும், நீர்த் தட்டுப் பாடான கிணறுகள் இல்லாதவிடத்து குழாய்க்கிணறு களும் அமைக்கப்பட்டு மனோ பசுமைத்திட்டம் நீடித்த பயனையீந்து சம்பந்தப்பட்டவர்களை வாழவைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







2021 இல் **"THINK 2WISE" - LONDON** நிறுவன நிதி அனுசரணையில், வறுமைக் கோட்டில் வாழும் நலிவுற்ற குடும்பங்களுக்கு, பொருத்தமான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தானியம் அரைக்கும் இயந்திரங்கள், வெவ்வேறாக்கும் இயந்திரம், கோழிக்கூடுகளும், கோழிகளும், சிறுதொழில் முன்னேற்பாடு, கால்நடைகள் (பசுமாடு, மறி ஆடு), மலசலகூடம், குழாய்க்கிணறு, வீட்டுத்தோட்டம், கல்விக்கூடம், கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலி, ஊன்றுகோல், பிளாஸ்ரிக் கதிரைகள் ஆகியவை, நொந்து போனவர்களுக்கு கசிந்துருக வைத்த வரமான உதவிகளாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மேலும் பாமதி சீருடைத்திட்டம் அமரத்துவப் பெயரிலான முன்னேற்றத்திட்டம் உமாசங்கர் கால்நடை வளர்ப்புத்திட்டம் ஆகியவை சார்பாகவும் உதவிகள் உபகாரங்கள் ஆதரவற்ற அபயம் கொண்டவர்களுக்கும், நலிவுற்ற குடும்பங்களுக்கும் சென்று சேர்ந்துள்ளன.

இதைவிட சமேயோசிதமாக உதவி கேட்டு வரும் யாசகர்களுக்கு உலர் உணவு, உடுபுடைவைகள் இல்லையென்னாது வழங்கப்படுகிறது. அதியுச்ச உதவியாக அரிசிப் பொதிகள் சமைத்து உண்பதற்காய் வழங்குவதோடு, மருத்துவ உதவிகளும் நல்கப்படுகிறது.

ஞாயிறு தோறும், பஞ்சம் பசி பட்டினியோடு எமைநாடி வரும் ஏழ்மை நிலையில் வாடுவோருக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. ஏழைகளின் வயிறு நிறைந்தால் அதுவும் ஆண்டவனின் ஆசீர்வாதமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப்ரத்யங்கிரா அறக்கட்டளையால் முன்னெடுக்கப்படும் மேற்படி அறம் சார்ந்த தர்மகாரியங்கள் சீராகவும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் நடைபெறுவதனால் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையை ஓர் அரசசார்பற்ற நிறுவனமாக இலங்கை அரசு பதிவு செய்துள்ளமை ப்ரத்யங்கிரா அறக்கட்டளைக்குக் கிடைத்துள்ள ஒரு பெரிய அங்கீகார மாகும். இந்த அங்கீகாரம், 2022/07/20 ஆம் திகதி வரமாகியது.






"எம் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற தாரக மந்திரம் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையில் என்றும் நின்று ஒலிக்கும். நன்றென யாவரும் பேறாக்குவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறக்கட்டளை ஊடாக:-

# அமரர் உமாசங்கர் கால்நடைகள் வளர்க்கும் திட்டம்



யாழ்ப்பாணக் கல்லூரி 1986 (O/L) சாதாரண பிரிவு மாணவனாகிய அமரர் உமாசங்கர் ஞாபகார்த்தமாக, கால்நடைகள் வளர்ப்புத்திட்டம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இதன் மூலம் பசுமாடுகள் சம்பந்தப் பட்ட வாழ்வாதாரத்தேவையின் பொருட்டு, வறுமை நிலை வாட்டிய குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளன. வழங்கப்பட்டும் உள்ளன.

இஃது ஒரு புண்ணியமான கைங்கரியமாகும். பசுவுக்கு ஒரு வாழ்வு பாருக்குப் பெரும்பேறு. "கோதானம்" என்பது தானங்களில் தேவ ஆசீர்வாதமானது என்று போற்றப்படுகிறது. இஃது நாட்டுக்கும், வீட்டுக் கும் ஆரோக்கிய வாழ்வையும், ஆயுளையும் என்றும் அளிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறக்கட்டளை ஊடாக:-

# "குமரன் விளையாட்டுக்கழகம் (கனடா) வீட்டுத்திட்டம்"



பரம ஏழைகளின் வாழ்விலே குடிபுகுந்து இறைவன் பற்பல சோதனைகளைத் தருவிப்பதன் மூலம், ஈர நெஞ்சுடையோரை தேவராக, இரங்க வைத்து இனங்காணுகின்ற ஒரு தர்ம காரியமாக மேற்படி வீட்டுத்திட்டம் வரமாகிறது.

இதன்பிரகாரம் இத்திட்டத்தில் கனடா குமரன் விளையாட்டுக்கழகப் பெருங் கொடையாளர்களால், பொருளாதாரம் நலிவடைந்து உழலும் ஏழ்மை நிலையில் வீட்டுக்காக ஏங்கும் வறியநிலை பயனாளிகளுக்கு, இற்றைவரை 15 பதினைந்து வசதியான வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. இது ஒரு தெய்வ சங்கல்பமாகும்.

தொடர்ந்தும், அதியுச்ச வறுமை நிலையிலுள்ள வீட்டுக்காகத் தவிக்கும் ஏழைகளை இனங்காணும் பட்சத்தில் வீடுகளுக்கான உதவிக்கு மேற்படி கழகம் தமது கரங்களை ஈவதற்காய் தயாராக வைத்துள்ளது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறக்கட்டளை ஊடாக:-

# “அன்னம் பாலிக்கும் தர்மசாலை”







பசியோடு தவிக்கும் ஏழை பங்காளர்களின் வயிறு காயாமல் உயிர்பெற்று நீடு வாழ்வதற்காக, பிரதி ஞாயிறுதோறும் அக்ஷய பாத்திர வரமோடு அன்னதானம் குறைவின்றி வழங்கப்படுகிறது. சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட ஏழை பங்காளர்களுக்கு மதிய நேர அன்னம் அன்போடு பாலிக்கப்படுகிறது.

பஞ்சம் பசி பட்டினி பாரெல்லாம் வந்தாலும், ப்ரத்யங்கிரா அறக்கட்டளை இல்லையென்னாது வயிற்றுக்கு ஈயும். வயிறு குளிர்ந்தால் வாழ்வு வரமாகும். தானியமும் பொலியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோசாலை

பசுவைப் போற்றி வளர்த்தால் பூமியில் புண்ணியம் பூத்துக் குலுங்கும் என்பார்கள் புண்ணியவான்கள். அந்த வகையில், பொருளாதாரம் குன்றிய நலிவடைந்த குடும்ப விருத்தி கருதியும் அவர்களது வளரக்கும் பாங்கு கருதியும் பசுக்கள் சினையூட்டப்பட்ட நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் பரோபகாரம் கருதி கோசாலை பராமரிக்கப்பட்டு வருகிறது.



# "குளம் புனரமைப்பு"

எமது பிரதேசத்தில் தூர்ந்துபோனதும், பாழடைந்ததுமான குளங்களை இனங்கண்டு, ஆய்வுசெய்து, அதனதன் பயன்பாடு கருதி பயனாளிகளின் தேவைகளுக்காக குளம் புனரமைப்புச் செயற்றிட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் பிரகாரம் குளம் புனரமைக்கப்படுகிறது. இந்தச் செயற்றிட்டம் பாரிய செயற்றிட்டமாகும். தூர நோக்கோடு ஆற்றப்படும் இச் செயற்றிட்டமானது பெரும் நிதித்திட்ட முதலீட்டில் அமுல்படுத்தப்படுகிறது. விவசாயிகளுக்கு இது பெரிதும் நன்மை பயக்கும் என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பெருந்தகைகள்

“ப்ரத்யங்கிரா” அறக்கட்டளையை ஒரு அரச சார்பற்ற நிறுவனமாக அரசாங்கத்தில் பதிவு செய்வதற்குப் பல்விதமான ஆதாரங்களையும் செயற்றிட்ட மற்றும் கணக்கு அறிக்கைகளையும் சமர்ப்பித்து திருப்தி காணும் பட்சத்திலேயே அது சாத்தியமாகும். இந் நிலையில்,

அதன் பணிப்பாளராக அப்போது சிறப்பாகக் கடமையாற்றிய,

திருவாளர் ராஜா குணரட்னா அவர்கள் (Attorney at law, Registrar of non Governmental Organization) மற்றும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மகேசன் அவர்கள், கூடவே இதற்கு அனு கூலமாகிப் பதிவதற்கு ஒத்தாசை புரிந்த அரச செயலக இணைப்பாளர் திரு. தயாபரன் அவர்கள் யாவருமே நேர்மையாகவும், பக்கச் சார்பில்லாமலும் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையைப் பதிவதற்கும், இயங்குவதற்கும் வழி சமைத்தவர்களாவார்கள். இவர்களுக்கு எமது அறக்கட்டளை நன்றியுடையதாக என்றும் விளங்கும்.

**“ நலிவுற்றோர் வாழ்வில் ஒளியேற்றுவோம்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ விருந்தினர்
திரு.நடராஜா சிவரூபன் J/170,J/171
கிராம சேவையாளர்

திரு.தர்மலிங்கம் நடனேந்திரன்
தவிசாளர் வலிமேற்கு சங்கானை.

திருமதி.வி.கஜநிதி
நூலகர் பொது நூலகம் கோண்டாவில்
நல்லூர் பிரதேச சபை.

திருமதி. இராஜரட்ணம் ஜெயலட்சுமி
சமூக ஆர்வலர் வட்டுக்கோட்டை.

திரு.சிவபாலன் சிவகுமார்
கிராம சேவையாளர் - J/165,J/166

திருமதி.தேவமனோகரி கலைச்செல்வன்
கிராம சேவையாளர் - J/165,J/166

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
1986 ஆம் ஆண்டு O/L பிரிவு பழைய மாணவர்கள்.

திரு.கந்தையா கனகரட்ணம்
சமூக ஆர்வலர்.

சி.ஞானகணேசன்
சமூக ஆர்வலர்

திரு.மோகனகுமார் ஆசிரியர்
யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை

திருமதி. கோமளா தெய்வேந்திரம் ஆசிரியர்
யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை

திரு. குமார் மகரசு

திருமதி. செந்தில்குமரன் தேவிகா

Dr. சிதம்பரம் மோகன்

திரு.உ.உதயசூரியன் JP
ப்ரத்யங்கிரா அறக்கட்டளை போசகர்
ஓய்வு நிலை உத்தியோகத்தர்.

BASTIYAM PILLAI KENEDY
TRAVEL KINGDOM OF JAFFNA(PVT LTD) CEO

திருமதி.செ.இராஜேஸ்வரி
தலைவி யாழ் அம்மா அறக்கட்டளை

| | | |
|---|---|---|
| த.லீலாதேவி<br>செயலாளர் | திருமதி.ஜெயந்தி பரமலிங்கம்<br>தலைவர் மக்கள் மறுமலர்ச்சி கழகம் | து.ரவிச்சந்திரன்<br>பொருளாளர் |

நன்றி.

தமிழ் வாழ்க

**ப்ரத்யங்கிரா அறக்கட்டளை (NGO)**
**உதயமும் யாழ்ப்பாணக்கல்லூரி**
**1986 (O/L)சாதாரணதர பிரிவினரின்**
**நூல் வெளியீடும்**
**மாபெரும் மாணவர்களுக்கான**
**கற்றல் உபகரணங்கள் வழங்கல்**
**மற்றும் கௌரவ நிகழ்வு**
**2023**

**போதைப் பொருள் பாவனை தவிர்ப்பும்**
**மாணவர்களுக்கான கல்வி அபிவிருத்தியும்**
**“முடியாது என்பது முட்டாள் தனம்**
**முடியும் என்பதே மூலதனம்**
**வறிய மாணவர்களை நிறைவாக்குவோம்''**

**இடம் :– யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை**
**விளையாட்டு மைதானம்**
**காலம் :– 14.01.2023 சனிக்கிழமை**
**நேரம் :– மாலை 2.30 மணி**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தலைமை
Dr.Rev.Fr .ந. சுபாஸ்
ஆலோசகர் ப்ரத்யங்கிரா அறக்கட்டளை

தலைவர்
திரு.தி.சந்திரபால்
ப்ரத்யங்கிரா அறக்கட்டளை

பிரதம விருந்தினர்
Mr.S.UthayakVumar
Provincial Director of Education
Provincial Department of Education
Northern Province.

சிறப்பு விருந்தினர்
வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா
பிரதிப்பணிப்பாளர் யாழ் போதனா வைத்தியசாலை.

திரு.S.தேவராஜா
சட்டத்தரணி - பதில் நீதிபதி மல்லாகம்.

திருமதி.நளாயினி இன்பராஜ்
சிரேஸ்ர உதவி செயலாளர்
கல்வி பண்பாடு விளையாட்டு மற்றும் இளைஞர்
விவகார அமைச்சர் வடமாகாணம்.

திருமதி.பிறேமினி பொன்னம்பலம்
பிரதேச செயலர் வலி மேற்கு சங்கானை

திருமதி.அயந்தன் சியாமினி
NDDCB மாவட்டச் செயலகம்

Rev.Dr.D.S.Solomon
Principal Jaffna College
Vaddukoddai.

Mrs.Rushiva Kulasingam
Principal Jaffna College
Vaddukoddai.

UJITH N.P LIYANAGE
SENIOR SUPERINTENDENT OF
POLICE JAFFNA DIVISION.

COLONEL KAMINDA SILVA
COMMANDER 515 BRIGADE.

Mr.R.Jonald Antony
Deputy Director of Education (Planning)
Provincial Department of Education
Northern Province.

திரு.நா.சுதர்சன்
பணிப்பாளர்
சர்வதேச சிறுவர் பணியகம் இலங்கை.

A.B.A.K.Mendis
Chief Inspector Of Police
Officer Commander STF
Jaffna.

W.D.P.T.Costa
OIC Police Station Vaddukoddai.

S.Yougendra (J.P)
District Coordinator
Sarvodaya Jaffna.

திரு.நா.அசோகரத்தினம்
பொறுப்பதிகாரி மதுவரி நிலையம் சங்கானை
இலங்கை மதுவரித்திணைக்களம்

வணபிதா. சாம் ராஜசூரியர்
இயக்குனர் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மானிப்பாய்.

சிவ ஸ்ரீ சு.ரங்கநாதக் குருக்கள்

ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலையம்
வண.கலைமாணி மீகஹஜந்துரே சிறிவிமல தேரர்
M.Dhmma Thero

கலாநிதி அருட்தந்தை வின்சன்ற் பற்றிக்
மாற்றம் அறக்கட்டளை

அல்ஹாச் மௌலவி JMA அசீஸ் ஹாசிமி
யாழ் கிளிநொச்சி மாவட்ட சர்வமத தலைவர்
அகில இலங்கை சமாதான நீதவான்

Sr.Prothmary Mariananthan
Holy family Councillor of Jaffna Province

திருமதி.க.அனுசா
நிர்வாக இயக்குனர்
சர்வதேச சிறுவர் பணியகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prathiyangira Trust

ப்ரத்யங்கிரா அறக்கட்டளை




SCAN ME

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org